# TARGETING TNPSC GROUP-II 2023

## 6th தேர்வு

Marks : 300
Time : 3 Hrs

QUESTION WITH SIMPLIFIED ANSWER



## MAINS WRITTEN EXAM

# சமூக பொருளாதார பிரச்சனைகள்

## முழுத்தேர்வு


SURESH' IAS ACADEMY

தமிழ் வழி

| தூத்துக்குடி | திருநெல்வேலி | இராமநாதபுரம் | மதுரை | சென்னை |
|---|---|---|---|---|
| 0461 - 4000970 | 0462 - 2560123 | 75503 52916 | 0452 - 2383777 | 97555 52003 |
| 99445 11344 | 98942 41422 | 75503 52917 | 98431 10566 | 97555 52009 |

TEST 6 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key - Tamil

அலகு - 1

**1) விசாகா கமிட்டி பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**

**பின்னணி** 1

- விசாகா கமிட்டி என்பது இந்தியாவில் பாலியல் துன்புறுத்தல் வழக்குகளில் வழிகாட்டுதல் தொகுப்பாகும்.
- இவ்வழிகாட்டுதல்கள் இந்திய உச்சநீதிமன்றத்தால் 1997 நவம்பர் -3 இல் அறிவிக்கப்பட்டது.
- பணியிடத்தில் பாலியல் துன்புறுததல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) 2013 – சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**தோற்றம்** 1

- பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) 2013, பிரிவு 4(1)இன் படி அனைத்து நிறுவன அமைப்புகளும் விசாகா குழு என்று அழைக்கப்படும் உள் புகார் குழுவை உருவாக்க வேண்டும்.

**அமைப்பு** 2

- 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட நிறுவனங்களில் உள்ள புகார் குழுக்களை அமைத்தல்
- இக்குழுவானது ஒரு மூத்த பெண் பணியாளரை தலைமை அதிகாரியாக கொண்டிருக்கும்.
- இக்குழு பாலியல் துன்புறுத்தல் பற்றிய அறிவைக் கொண்ட தன்னார்வ தொண்டு நிறுவனத்தினைச் சேர்ந்த ஒரு வரையும் உள்ளடக்கியது.

**அதிகாரம் மற்றும் செயல்பாடுகள்** 2

- புகார்க் குழுக்கள் ஆதாரங்களைச் சேர்ப்பதற்கு சிவில் நீதிமன்றங்களின் அதிகாரங்களை கொண்டுள்ளது.
- புகார்தாரர் சமரசத்தைக் கோரினால் புகார்க் குழுக்கள் விசாரணையைக் தொடங்கும் முன் சமரசம் செய்துகொள்ள வேண்டும்.

**தண்டனை விதிகள்** 0.5

- முதலாளிகளுக்கு அபராதம் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு இணங்காமல் இருந்தால் அபராதத்துடன் கூடிய தண்டனை வழங்கப்படும்.
- மீண்டும் மீண்டும் சட்ட விதிகளை மீறினால் அதிக அபராதம் விதிக்கப்பலாம் மற்றும் வணிக உரிமம் (அ) பதிவு ரத்து செய்யப்படலாம்.

**2) தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005இன் விதி ‘8’இல் வழங்கப்பட்டுள்ள தகவல் அளிப்பதிலிருந்து உள்ள விலக்குகளைப் பட்டியலிட்டு எழுதுக.** 1

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005இன் படி பிரிவு 8இல் உள்ள எந்த தகவலையும் எந்தவொரு குடிமகனுக்கும் கொடுக்க வேண்டிய நிர்பந்து இல்லை.

5

1. இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு, மாநிலத்தின் பாதுகாப்பு, வெளி மாநிலத்துடனான உறவு அல்லது குற்றத்தைத் தூண்டுவதற்கு வழிவகுத்த தகவல்களை வெளிப்படுத்துதல்
2. நீதிமன்றத்தால் வெளியிடப்படுவதற்கு தடைசெய்யப்பட்ட தகவல் (அ) நீதிமன்றத்தை அவமதிக்கும் தகவல்
3. பாராளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றத்தின் சிறப்புரிமையை மீறும் தகவல்
4. மூன்றாம் தரப்பினரின் போட்டி நிலைத்து தீங்கு விளைவிக்கும் வணிக நம்பிக்கை வர்த்தக ரகசியங்கள் (அ) அறிவுசார் சொத்து உள்ளிட்ட தகவல்கள்
5. அறப்பொறுப்பினர் உறவில் கிடைக்கும் தகவல்கள்
6. வெளிநாட்டு அரசிடம் ரகசியமாய் பெற்ற தகவல்கள்
7. நபர் ஒருவரின் வாழ்க்கைக்கு (அ) உடற்பாதுகாப்பிற்கு (அ) பாதுகாப்பு நோக்கங்களுக்காக ரகசியமாய் கொடுக்கப்பட்ட உதவிக்கு அபாயம் விளைவிக்கக் கூடிய தகவல்கள்
8. புலனாய்வு செயல்முறைக்கு (அ) குற்றவாளிகளை கைது செய்தலுக்கு (அ) குற்ற வழக்கு தொடர்வதற்கு தடை செய்யும் தகவல்கள்
9. அமைச்சர்கள், குழு, செயலாளர்கள் மற்றும் பிற அலுவலர்களின் பதிவுருக்கள் மற்றும் அமைச்சரவை ஏடுகள்.
10. அமைச்சரவைக் குழுவின் முடிவுகள், அவற்றிற்கான காரணங்களை அக்காரணங்கள் நிறைவடைந்த பின்னர் தனிநபரின் தனியுரிமையின் மீதான நியாயமற்ற தலையீடு.

**3) தமிழக நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் – 2022ன் சிறப்பம்சங்கள் யாவை? மற்றும் அதன் நன்மைகளை பட்டியலிடுக.**

SURESH'

**முக்கிய அம்சங்கள்** 3

- இந்தத் திட்டம் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பை வழங்குவதையும் பொதுச் சொத்தை உருவாக்குதல் மற்றும் பாரம்பரியத்தையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்ம் 2021 – 22ஆம் ஆண்டில் பெரிய சென்னை மாநகராட்சியின் இரண்டு மண்டலங்களிலும் 14 மாநகராட்சிகளில் தலா 1 மண்டலத்திலும், 7 மண்டலங்களில் தலா 1 பேரூராட்சியிலும் 37 மாவட்டங்களில் தலா 1 பஞ்சாயததிலும் சோதனை அடிப்படையில் தொடங்கப்படும்.
- இத்திட்டத்தை செயல்படுத்த அரசு, 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் சி.ரங்கராஜன் தலைமையிலான கமிட்டியின் பரிந்துரைகளின்அடிப்படையில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் மொத்த நபர்களின் 50% பெண்களுக்கு ஒதுக்கப்படும்.
- பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் சம ஊதியம் வழங்கப்படும் திறமையற்ற மற்றும் அரை திறமையான வேலைக்கு
- நீர்நிலைகளை தூர் வார்தல் மற்றும் பொது பூங்காக்கள் மற்றும் பிற இடங்களின் பராமரிப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

**திட்டத்தின் நன்மைகள்** 3

1. வாழ்வாதாரம் & சமூகம் பாதுகாப்பை வழங்குகிறது.
2. வேலைவாய்ப்பை அதிகரிக்கவும்
3. பொது சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்
4. தமிழக குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
5. சமூகப் பாதுகாப்பை வழங்குதல்
6. கோவிட் – 19 காரணமாக வேலை இழந்த நகர்ப்புற ஏழைகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குதல்
7. அதிகரித்துவரும் நகர்ப்புற மக்களின் வேலைவாய்ப்புக்கான கோரிக்கைகளை பூர்த்தி செய்தல்.

**4) ஓம்பட்ஸ்மேன் என்றால் என்ன? உதாரணங்களுடன் விளக்குக**

**ஓம்பட்ஸ்மேன்:** 2

- குறைகேள் அதிகாரி (ஓம்புட்ஸ்மேன்) என்பவர் ஓர் அரசு அல்லது அமைப்பு தொடர்பாக மக்களுக்கு இருக்கக்கூடிய குறைகளைக் கேட்டு அதை நிவர்த்தி செய்ய முற்படும் அதிகாரி ஆவார்.
- இந்தக் கருத்து ஸ்வீடன் நாட்டிலிருந்து பெறப்பட்டதாகும்.
- இது புகார்களை கையாள சட்டமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி என்று பொருள்.
- எ.கா : மத்திய புலனாய்வுத்துறை, லோக்பால் தலைவர் போன்றவை

**பல்வேறு துறைகளில் ஓம்புட்ஸ்மேன்:** 4

**ஊழல் எதிர்ப்பு ஓம்புட்ஸ்மேன்:**

- இந்தியாவில் ஊழல் நடைமுறைகளை சரிபார்க்கிறது.
- எ.கா : லோக்பால் & லோக் ஆயுக்தா

**வங்கி ஓம்புட்ஸ்மேன்:**

- 2006இல் உருவாக்கப்பட்ட அரை நீதித்துறை ஆணையம்
- வங்கி வாடிக்கையாளர்களின் புகார்களை கையாள்கிறது.

**காப்பீட்டு ஓம்புட்ஸ்மேன்:**

- தனிப்பட்ட பாலிசிதாரர்களின் புகார்களை வரிசைப்படுத்துகிறது.
- காப்பீட்டு குறைதீர்ப்பாளர் விதிகள், 2017இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

**வருமான வரி ஓம்புட்ஸ்மேன்:**

- ஒவ்வொரு வரி செலுத்துபவரின் உரிமைகளை பாதுகாக்கிறது.
- வருமான வரி இயக்குநரின் குறைதீர்ப்புப் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட புகார்களை கையாள்கிறது.

**பங்கு விற்பனைதாரர் (ஷேர் மார்க்கெட்) ஓம்புட்ஸ்மேன்:**

- செபி பார்வையாளர் புகார்களை இணையவழி புகார்களை பதிவு செய்கிறது.

**5) சிறுகுறிப்பு வரைக.**

**a) NCLP**

**b) CLPRA**

**a) NCLP**

- NCLP : தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் **0.5**
- தேசிய குழந்தையின் தொழிலாளர் திட்டம் – 1987இன்படி மத்திய அரசால் 1988இல் தொடங்கப்பட்டது.
- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.

**நோக்கம்:** 1

- குழந்தைத் தொழிலாளர் முறையால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வு

- NCLP மையங்களின் மூலம் தொழில் பயிற்சியுடன் முறையான பள்ளிக்கல்வி முறைக்கு அவர்களை முதன்மைப்படுத்துதல்

**தகுதி / இலக்கு** 0.5

- குழந்தைகள் – வயது 9 முதல் 14 (அபாயகரமான தொழிலகங்களில் வேலை செய்பவர்கள்)
- இளம் பருவத்தினர் : 18 வயதுக்கு குறைவானவர்கள்

**முறையான கல்வி** 1

- குழந்தைகள் – உள்ளூர் பள்ளிகளில் கல்வி கற்பது எளிதாக்கப்பட்டது.
- இளம் பருவத்தினர் – திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு ஆபத்தற்ற சூழலில் வேலைவாய்ப்பை வழங்குதல்
- மீட்கப்பட்ட குழந்தைகளை சர்வ சிக்ஷா அபியான், உடன் இணைக்கப்பட்டனர்.

**b) CLPRA** 0.5

- CLPRA குழந்தை தொழிலாளர் தடை பதிவுச் சட்டம், 1986

**நோக்கம்:** 0.5

- 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அபாயகரமான இடங்களில் வேலைக்கு அமர்த்துவதை தடை செய்கிறது.
- இது குழந்தைத் தொழிலாளர்களின் நேரம் மற்றும் வேலை நிலையை ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**CLPRA திருத்தச்சட்டம் 2016:** 2

- எல்லாத் தொழிலிலும் குழந்தைகளை ஈடுபடுத்துவதை தடை செய்தல்
- இளம் பருவத்தினர் அபாயகரமான தொழில்களில் ஈடுபடுவதை தடைசெய்தல்
- இந்திய அரசாங்கம், இச்சட்டத்தை மீறும் ஊழியர்களுக்கு கடுமையான தண்டனைகளை வழங்குகிறது.
- எந்த குழந்தை அல்லது பருவ வயதினரையும் வேலைக்கு அமர்த்துதல் என்பது ஒரு சட்ட மீறலாகும்.
- எந்தவொரு அபாயகரமான நிறுவனத்திலும் இளம் பருவத்தினர் பணிபுரிவதைத் தடுக்கிறது.

**6) ஊழலின் பல்வேறு வடிவங்களை விளக்குக.**

- ஊழல் என்பது ஒருவரின் பதவியில் நேர்மையின்மை (அ) குற்றவியல் நடைமுறையாகும்.

**ஊழலின் பல்வேறு வடிவங்கள்** 6

**1. லஞ்சம்**

- தனிப்பட்ட ஆதாயத்திற்கு ஈடாக பரிசுகள் மற்றும் உதவிகளை தவறாகப் பயன்படுத்துதல்
- இதில் பணம், பரிசுகள், ரியல் எஸ்டேட் போன்றவை அடங்கும்.

**2. உறவுமுறைக்கு முன்னிலை அளித்தல்**

- அதிகாரம் வைத்திருப்பவரிடமிருந்து உறவினருக்கு தேவையற்ற தயவு
- இது ஊழலின் நுட்பமான வடிவம் என்று விவரிக்கப்படுகிறது.

**3. விருப்புரிமைவாதம்**

- தேவையில்லாமல் ஒன்றை விரும்புதல்
- எ.கா : சென்னை உயர்நீதிமன்றம் தயவு, உறவுமுறை மற்றும் ஊழல் செயல்பாடுகள் ஆகியவை தேசிய மற்றும் அரசியலமைப்பிற்கு எதிரானது என்று கூறியது.

**4. அபகரிப்பு**

- ஒரு உரிமையாளர் அல்லது நிறுவனத்திடம் இருந்து நிதியை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது தக்கவைத்தல் மற்றும் திருடுதல் ஆகியவை இதில் அடங்கும்.
- எ.கா : வாடிக்கையாளரிடம் அதிக கட்டணங்களை வசூலித்தல்

**5. மோசடி**

- நேர்மையின்மை மூலம் அரசை ஏமாற்றுதல்
- எ.கா : வரி மோசடி, கடன் அட்டை மோசடி, காப்பீட்டு மோசடி

**6. அரசியல் ஊழல்**

- அரசாங்கத்தின் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துதல்
- எ.கா : நிலக்கரி கேட் ஊழல் போன்றவை

**7. பெரும் உழல்**

- பெரிய கொள்முதல் திட்டங்களில் நிகழ்கிறது.
- எ.கா : சாலைகள், அணைகள், மருத்துவமனைகள்

**8. சிறு ஊழல்**

- சிறிய தொகைகளை உள்ளடக்கியது மற்றும் குறைந்த அளவிலான ஊழல்
- எ.கா சுங்க அதிகாரிகள் பொருட்களை அனுமதிக்க

**7) தொழில் முனைவோருக்கான தமிழக அரசின் பல்வேறு வகையான திட்டங்களை பட்டியலிடுக.** 6

1. CARE கோவிட் உதவி மற்றும் தொழில்முனைவோர்க்கான நிவாரணம்
2. TANSIM தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் இன்னோவேஷன் மிஷன்
3. TN-IVP தமிழ்நாடு – புதுமையான உறுதிச்சீட்டு திட்டம்

4. TNCGS தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம்
5. TN CM's AWARD மாநில / மாவட்ட அளவில் முதலமைச்சரின் விருது
6. NEEDS புதிய தொழில்முனைவோர் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்
7. TAICO வங்கித் திட்டங்கள்
8. TIC தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
9. TAHDCO தாட்கோ – தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
10. UYEGP வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தொழில் தொடங்க நிதியுதவி வழங்கும் திட்டம்
11. TNMBIIDP தமிழ்நாடு உற்பத்தி வணிக காப்பீட்டு உள்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம்
12. Start Up TN

**8) மனித கழிவுகளை மனிதர்களே கையாளுவதை தடை செய்வது மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வு அளித்தல் சட்டம் – 2013 – விவரி.**

**தோற்றம்:** 1

- 1993ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய அரசாங்கம் கையால் துப்புரவாளர்களின் வேலைவாய்ப்பு மற்றும் உலர் கழிப்பறைகள் தடை சட்டத்தின்படி கையால் துப்புரவாளர்களாக பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டம் – 2013ஐ இயற்றியது.

**நோக்கம்:** 1

- அரசியலமைப்பின்படி கையால் சுத்தம் செய்பவர்களுக்கு கண்ணியத்துடன் வாழும் உரிமையை வழங்க வேண்டும்
- சமூக அநீதியிலிருந்து நலிந்த பிரிவினரைப் பாதுகாக்க
- சுகாதாரமற்ற கழிப்பறைகள் மற்றும் நியாயமற்ற சாதி அமைப்பிற்கு முடிவுகட்டுதல்
- அவர்களின் கண்ணியமான வாழ்க்கைக்கு மறுவாழ்வு அளித்து வரலாற்று அநீதியை சரிசெய்தல்

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள்:** 4

- இது கைமுறையாக துப்புரவு செய்வதை தடை செய்கிறது மற்றும் பணியில் இருக்கும் ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் (அ) வழக்கமான அடிப்படையில் வெளியேற்றுதல்
- இது அனைத்து வகைகளையும் உள்ளடக்கியதன் மூலம் கைமுறையாக துப்புரவு செய்பவர்களின் வரையறையை விரிவுபடுத்துகிறது.
- கையால் துப்புரவு செய்பவர்களின் அடிப்படைத் தேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களின் மறுவாழ்விற்கு உதவுதல்
- மாற்றுத் தொழிலை மேற்கொள்வதற்கான வீடுகள், நிதிஉதவி மற்றும் கடன்கள் மற்றும் அவர்களுக்கான பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்
- அவர்களின் குழந்தைகளுக்கு ரூ3000 உதவித்தொகையை அரசாங்கம் வழங்குகிறது.
- இச்சட்டம் கைமுறையான துப்புரவு செய்வதை குற்றமாக கருதுகிறது.
- நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கைமுறையாக துப்புரவு செய்வது பற்றி கண்காணித்து சுகாதாரமற்ற கழிப்பறைகளை சுகாதாரமாக மாற்றுதல்
- தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கருவிகள் வழங்குவதை இது கட்டாயமாக்குகிறது.

**9) கோவிட் – 19 பெருந்தொற்றின் போது மகளிர் சந்தித்த சிக்கல்களை சுட்டி காட்டுக.**

**பெண்கள் மீதான பொருளாதார தாக்கங்கள்:** 2

- வீடு மற்றும் பராமரிப்பு வேலைகளில் அதிக சுமை
- அதிக விகிதங்களிலான வேலை இழப்பு-குறைக்கப்பட்ட நிதி சுதந்திரம் மற்றும் எதிர்கால வாய்ப்புகள்

**சமூக தாக்குதல்கள்:** 2

- பாலின அடிப்படையிலான வன்முறை
- பாலியல், உடல் ரீதியான மற்றும் குடும்ப வன்முறை
- ஊதியம் பெறாத பராமரிப்பு பணி அதிகம் ஏற்படும் மன உளைச்சல்

**சுகாதார அமைப்பு பாதிப்புகள்:** 2

- முன்னணி சுகாதாரப் பணியாளர்களுக்கான ஆபத்து அதிகரித்தது.
- முக்கிய சுகாதார சேவைகளுக்கான அணுகல் குறைக்கப்பட்டது. கோவிட் – 19 சிகிச்சைகள் போதிய அளவில் கிடைக்காமல் இருந்தது.
- கர்ப்பம் தொடர்பான இறப்புகள் மற்றும் இளம் பருவ பெண்களின் கர்ப்ப விகிதம் அதிகரிப்பு
- பாலியல் இனப்பெருக்க சுகாதார சேவைகள் மற்றும் முன்னுரிமைகள் மறுக்கப்படுவது போன்ற காரணங்களைச் பெண்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது.

**10) உலகளாவிய மனித உரிமை பிரகடனத்தில் தரப்பட்டுள்ள அடிப்படையான மனித உரிமைகள் யாவை?**

**மனித உரிமைகள் உலகளாவிய பிரகடனம்: (UDHR)**

- UDHRஎன்பது ஒரு தனிநபரின் அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்கள் பற்றிய 30 விதிகளைக் கொண்டுள்ளது.

SURESH

- இது பல்வேறு இனம், மதங்கள் மற்றும் பல்வேறு நாடுகளில் உள்ள அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானது.

<u>அடிப்படை உரிமைகள்</u> 6

- விதி 1 : அனைவரும் சுதந்திரமாகவும் சமமாகவும் பிறந்தவர்கள்
- விதி 2 : பாகுபாடு காட்டாதீர்கள்
- விதி 3 : அனைவருக்கும் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை
- விதி 4 : அடிமைத்தனம் மற்றும் அடிமை விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது.
- விதி 5 : எந்த நபரையும் வதைக்க (அ) சித்தரவதை செய்ய முடியாது.
- விதி 6 : நீங்கள் எங்கு சென்றாலும் உங்களுக்கான உரிமை உள்ளது.
- விதி 7 : சட்டத்தின் முன் அனைவரும் சமம்
- விதி 8 : மனித உரிமைகள் சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது.
- விதி 9 : நியாயமற்ற முறையில் கைது செய்யவோ, காவலில் வைக்கவோ (அ) நாடு கடத்தவோ முடியாது.
- விதி 10 : நியாயமான பொது விசாரணைக்கான உரிமை
- விதி 11 : ஒரு நபரின் மீதான குற்றம் நிரூபிக்கப்படும் வரையில் உள்ள குற்றமற்றவர்.
- விதி 12 : தனியுரிமைக்கான உரிமை
- விதி 13 : இடம்பெயர்வதற்கான சுதந்திரம்
- விதி 14 : வாழ பாதுகாப்பான இடம் தேடும் உரிமை
- விதி 15 : ஒரு தேசியத்திற்கான உரிமை

**11) முழு வறுமை மற்றும் ஒப்பீட்டு வறுமையை உதாரணத்துடன் விளக்குக.**

<u>முழுமையான வறுமை:</u> 2

- இது வறுமை (அ) மோசமான வறுமை என்றும் அறியப்படுகிறது.
- அடிப்படை உணவு, சுத்தமான நீர், சுகாதாரம், தங்குமிடம் மற்றும் கல்வி போன்றவற்றின் பற்றாக்குறையை உள்ளடக்கியது.
- முழுமையான வறுமையில் உள்ளவர்கள் வாழ்வதற்காக பல தடைகளையும், மலேரியா, காலரா மற்றும் தண்ணீர் போன்ற தடுக்கக்கூடிய நோய்களால் ஏற்படும் குழந்தைகளின் இறப்புகள் ஆகியவற்றையும் சந்திக்கின்றன.
- முழுமையான வறுமை வளர்ந்துவரும் (அ) வளராத நாடுகளிலேயே அதிகம் காணப்படுகிறது.

<u>ஒப்பீட்டு வறுமை:</u> 2

- இது வாழ்க்கைத் தரத்துடன் ஒப்பிடும்போது சமூகக் கண்ணோட்டத்தில் வரையறுக்கப்படுகிறது.
- சுற்றுப்புறங்களில் வாழும் மக்களின் பொருளாதார தர நிலைகள். எனவே இது வருமான சமத்துவமின்மையின் ஒரு அளவுகோலாகும்.
- எ.கா : விடுமுறைக்கு செலவழிக்க, குழந்தைகளுக்கு பரிசு பொருட்கள், வாங்க இயலாத நிலை
- ஒப்பீட்டு வறுமை என்பது சராசரி வருமானத்தின் சில நிலையான விகிதத்தைவிட குறைவான வருமானம்.
- மக்கள்தொகையின் சதவீதத்தால் அளவிடப்படுகிறது.
- வளர்ந்த பணக்காரர்களின் வறுமை விகிதத்தை கண்டறியப் பயன்படுத்தப்படுகிறது.

<u>முழுமையான வறுமைக்கும் ஒப்பீட்டு வறுமைக்கும் உள்ள வேறுபாடு:</u> 1

- முழுமையான வறுமைஒப்பீட்டு வறுமைமனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், தண்ணீர் ஆகியவற்றின் பற்றாக்குறை வருமான சமத்துவமின்மையின் அளவீடு. இது மக்களின் வருமானங்கள் மற்றவர்களின் வருமானத்துடன் ஒப்பிடுகிறது.
- இரண்டு வகையான வறுமையும், தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாக இருந்தாலும், ஒப்பீட்டு வறுமையே மிகப் பெரிய சமூக சிக்கலாக பார்க்கப்படுகிறது.
- வறுமையை குறைப்பதற்கான கொள்கையை மேம்படுத்துவதற்காக பெரும்பாலான நாடுகள் ஒப்பீட்டு வறுமை அளவீட்டை கணக்கில் கொள்கின்றனர்.

**12) ஆபரேஷன் பசுமை வேட்டை (Green Hunt) பற்றிச் சிறுகுறிப்பு வரைக**

<u>ஆபரேசன் கிரீன் ஹண்ட்:</u> 1

- ஆபரேசன் கிரீன் ஹண்ட் என்பது நக்சலைட்களுக்கு எதிரான பாராமிலிட்டரி படைகள் மற்றும் மாநிலப் படைகளின் ஆல் அவுட் தாக்குதலை விவரிக்க இந்திய ஊடகங்களால் பயன்படுத்தப்படும் பெயர்.
- நவம்பர் 2009இல் சிவப்பு காரிடாரில் ஐந்து மாநிலங்களில் இந்நடவடிக்கை தொடங்கப்பட்டது.

<u>செயல்படுத்துதல்:</u> 2

- மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் கமாண்டோ பட்டாலியின் ஃபார் ரெசல்யுட் ஆக்ஷன் முன்னிலையில் செயல்படும்.
- இந்தியாவில் சிவப்பு காரிடார் : இந்தியாவின் மத்திய, தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் சுமார் 11 மாநிலங்களை உள்ளடக்கியது.

SURESH'

- ஒடிசா, பீகார், சத்தீஸ்கர் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் காணப்படுகிறது.
- இது மாவோயிஸ்ட் கிளர்ச்சிக்கான செய்திகளில் பிரபலமானது.

**தாக்கம்:** 3

- 2010ஆம் ஆண்டில் நக்சலிசத்தால் பாதிக்கப்பட்ட 223 மாவட்டங்களில் இருந்து 9 ஆண்டுகளில் ஆண்டுகளில் 90ஆக குறைத்துள்ளது.
- நக்சலைட்டுகளின் பாதிப்பில் இருந்து மீண்டு வருவதற்காக நிவாரண மற்றும் மறுவாழ்வுக் கொள்கைகயையும் அரசாங்கம் ஆரம்பித்தது.

**13) குழந்தை உரிமை பாதுகாப்பு தேசிய ஆணையமானது (NCPCR) எந்த மாதிரியான செயல்களைக் கண்காணிக்கிறது?**

**குழந்தை உரிமை பாதுகாப்பு தேசிய ஆணையம்:** 6

- மார்ச் 2007 ல் பாதுகாப்பு ஆணையத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய சட்டம் (2005)

**NCPCR ஆல் கண்காணிக்கப்படும் நடவடிக்கைகள்:**

**1. பாதுகாப்புகளின் மதிப்பீடு மற்றும் நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துதல்**

- இது மத்திய அரசிடம் அறிக்கையை சமர்ப்பிக்கும்

**2. குழந்தை உரிமை மீறல் வழக்குகளின் விசாரணை:**

- முன் முயற்சி நடவடிக்கைகள்
- எ.கா: குழந்தை கலைஞர்களுக்கான வரவு வழிகாட்டுதல்களை 2022ல் வெளியிட்டது.

**3. குழந்தைகளின் தேவைகளை விசாரித்தல்:**

- சிறப்பு கவனம் மற்றும் பாதுகாப்பு -பின்தங்கியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், குழந்தை கைதிகள் போன்றவர்களுக்கு

**4. குழந்தை உரிமைகள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் படிப்பை ஊக்குவித்தல்**

- ஆராய்ச்சிகள் மேற்கொள்ள -குழந்தை உரிமைகளை பாதிக்கும் காரணிகளை ஆய்வு செய்தல்

**5. குழந்தைகள் தொடர்பான சட்டங்கள் செயல்படுத்தப்படுவதை கண்காணித்தல்:**

- போக்சோ சட்டம் 2012-RTE சட்டம் – 2009 போன்ற சட்டங்கள் மீறப்படுவதை கண்காணிக்கிறது.

**6. குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது:**

- சட்டமன்ற கூட்டத்தின்போது
- சர்வதேச மாநாட்டின் போது

**14) கல்வி வேலையின்மையை வரையப்பதுடன் அதற்கான காரணங்களைத் தருக.**

**கல்வி வேலையின்மை:** 1

- இது படித்த ஒரு நபர் தனக்கு பொருத்தமான மற்றும் திறமையான வேலையை அமைத்துக் கொள்ள முடியவில்லை எனும் சூழ்நிலையில் ஏற்படுகிறது.
- இது பட்டதாரிகளின் தேவைகளுக்கும் அவர்களுக்கு கிடைக்கும் வேலை வாய்ப்புகளுக்கும் இடையிலான பொருத்தமின்மையே காரணமாகும்.

**புள்ளி விவரங்கள்:** 5

- இந்தியாவில் 2 மில்லியன் பட்டதாரிகள் மற்றும் 0.5 மில்லியன் முதுகலை பட்டதாரிகள் வேலையில்லாமல் உள்ளனர்.
- இளைஞர் வேலைவாய்ப்பு
- பட்டதாரி நிலை – 8.0%
- முதுகலை நிலை – 9.3%

**கல்வி வேலையின்மைக்கான காரணங்கள்:**

**கல்விமுறை குறைபாடுகள்**

- காலாவதியான பாடத்திட்டம் படித்த வேலையின்மைக்கான காரணங்களில் ஒன்றாகும்.
- இந்தியாவில் படித்த இளைஞர்களின் 33% பேர் வேலையில்லாமல் இருப்பதாக கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

**அதிகரித்து வரும் மக்கள் தொகை:**

- உலக மக்கள் தொகையில் 2வது நாடு இந்தியா
- அதிக மக்கள் தொகை காரணமாக, அனைவரும் ஒரே வேலையை செய்ய விரும்புவதால் வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கிறது.
- மக்கள் தங்கள் படைப்புத்திறனை வெளிப்படுத்த தயாராக இல்லை.

**தொழில்நுட்ப உயர்தரத்தால் ஏற்படும் திறன் குறைவு:**

- டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வேலையில், அடிப்படை திறன்கள் இல்லாதது வேலையின்மைக்கு வழி வகுக்கும்
- உலக தரத்திற்கான செயல்களில் இளைஞர்கள் தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ள தேவை ஏற்பட்டுள்ளது.

**மெதுவான பொருளாதார வளர்ச்சி:**

- வணிக சுழற்சிகளில் ஏற்படும் அலைச்சல்கள்

SURESH'

- மந்த நிலை மற்றும் பணவீக்கம் மெதுவான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.
- இது படித்த இளைஞர்களுக்கு வேலையில்லா திண்டாட்டத்தை ஏற்படுத்துகிறது.

**பெற்றோரிடமிருந்து அழுத்தம்:**

- வேலையில்லாமல் இருக்கும் படித்த நபருக்கு தேவைகளுக்கும் வேலைவாய்ப்பு சுமைகளுக்கும் இடையே பொருந்தாமை.

**குடிசைத் தொழில்களுக்கு இடையிலான தொடர்புத்தன்மையின் குறைபாடு**

- குடிசை தொழிற்சாலைகளுக்கு இடையிலான தொடர்புத்தன்மை குறைபாட்டால் படித்த தனிமனிதர்களுக்கான வேலைவாய்ப்பின்மை ஏற்படுகிறது.
- இல்லையேல் இது மில்லியன் அளவிலான படித்த இளைஞர்களுக்கு வேலைதரும் தளமாக விளங்கும்.

**15) பாலின பட்ஜெட் என்றால் என்ன? இது பெண்களுக்கு அதிகாரமளித்தலை எவ்வாறு உறுதி செய்கிறது?**

**பாலின பட்ஜெட்:** 2

- பாலின உணர்திறன் கொண்ட சட்டம் மற்றும் திட்டங்களை உருவாக்குவதில் அக்கறை கொண்டுள்ளது.
- வளங்களை ஒதுக்கீடு செய்தல், செயல்படுத்துதல் மற்றும் திட்டங்களின் தணிக்கை, தாக்க மதிப்பீடு மற்றும் பாலின ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் தொடர் திருத்த நடவடிக்கையாகும்.

**பெண்களுக்கு அதிகாரமளித்தல்:** 4

1. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகையில் 48% பெண்கள்.
2. சேவைகள் மற்றும் வளங்களை அணுகுவதிலும் கட்டுப்படுத்துதிலும் பெண்கள் ஏற்றத்தாழ்வுகளை எதிர்கொள்கின்றனர்.
3. வளர்ச்சியின் பலன்கள் ஆண்களைப் போலவே பெண்களையும் சென்றடைவதை உறுதி செய்வதற்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும்.
4. பாலின வரவு செலவு திட்டம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க பெண்களுக்கும் அதிகாரமளிப்பதற்கான ஒரு வழியாகும்.
5. ஒதுக்கீடு மூலம் பெண்களின் வளர்ச்சியை நேரடியாக ஊக்குவிக்கிறது.
6. ஒரு பாலினத்திலிருந்து செலவு மற்றும் பொது சேவை வளங்களைக் கண்காணிக்கிறது.
7. அரசாங்க வரவு செலவுத் திட்டங்களை அதன் பாலின வேறுபாடுகளின் அடிப்படையில் பயன்படுத்துப்படுவதை உறுதி செய்கிறது.
8. பாலின சமத்துவம், மனித வளர்ச்சி, மற்றும் பொருளாதாரத்தில் நோக்கங்கள், செயல்திறன் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகிய குறிக்கோள்களை அடைவதற்கு பாலினத்திற்கு ஏற்ற பட்ஜெட் கொள்கைகள் பங்களிப்பு செய்கின்றன.

**16) சுகாதாரமான சுற்றுச்சூழல் என்பது தனிமனித கடமையா அல்லது சமுதாய பொறுப்பா?**

**ஆரோக்கியமான சூழல் - தனிநபர் மற்றும் சமூக பொறுப்பு:** 4

- ஒவ்வொருவருக்கும் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சுற்றுச்சூழலுக்கு உரிமை உண்டு.
- எ.கா: போதுமான நீர் வழங்கல் உட்பட உடல் மற்றும் மன ஆரோக்கியம் அல்லது நல்வாழ்வு, சுகாதாரம், கழிவுகளை அகற்றுதல் மற்றும் அனைத்து வகையான பாதுகாப்பு.
- நமது தனிப்பட்ட செயல்பாடுகள் மூலம் சுற்றுச்சூழல் தரத்தை மேம்படுத்தலாம் அல்லது மோசமடைய செய்யலாம்.
- மனித நடவடிக்கைகள் பல சுற்றுச்சூழல் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன.
- புவி வெப்பமடைதல், காலநிலை போன்ற பல கடுமையான சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்கள் நமக்கு உள்ளன. இவற்றிற்கு காரணமான காடழிப்பு, நீர் மற்றும் காற்று மாசுபாடு ஆகியவற்றிற்கு நாம் அனைவருக்கும் பொறுப்பு உண்டு.
- சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மறுசுழற்சி பொருட்களை மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்த வேண்டும். (எ.கா) பசுமை எரிபொருள், பொது வாகனப் பயன்பாடு நெகிழி பயன்பாட்டை குறைத்தல்.
- ஆரோக்கியமான சுற்றுச்சூழல் இல்லாமல் மனிதனால் ஆரோக்கியமாக இருக்க முடியாது.
- நாம் வாழும் சூழலின் தரத்திற்கு தனித்தனியாக நாம் அனைவருமே பொறுப்பு.
- புவி வெப்பமயமாதல், காலநிலை மாற்றம், காடழிப்பு, காற்று மற்றும் நீர் மாசுபாடு ஆகியவை முதன்மை சுற்றுச்சூழல் அச்சுறுத்தலாகும்.
- சுற்றுச்சூழல் பராமரிப்பிற்காக அனைவரும் சமமான பொறுப்பினை ஏற்க வேண்டும்.
- நமது பங்களிப்பு மற்றும் பொறுப்பை உணர்ந்து, தீர்வுகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளை செய்திடல் வேண்டும்.

- மறுசுழற்சி, மறுபயன்பாடு மற்றும் பசுமை எரிபொருள் பயன்பாடு ஆகிய செயல்பாடுகள் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பு அளிக்கிறது.
- ஆரோக்கியமான சுற்றுச்சூழல் கடந்து, மனித இனத்தின் நீட்டிப்பு சாத்தியமில்லை.
- சுற்றுச்சூழலின் தரத்தினை வாழ்வியல் ரீதியாக பராமரிப்பது நாம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட கடமையாகும்.

**முடிவுரை:** 2

- பெரும்பாலான மக்கள் தூய்மையான மற்றும் பாதுகாப்பான சூழலை விரும்புகிறார்கள் ஆனால் அதற்கான முயற்சிகளில் யாரும் பங்கு கொள்வதில்லை.
- சுற்றுச்சூழல் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஒவ்வொரு தனிநபருக்கும் பொறுப்பு உண்டு.
- தூய்மையான சுற்றுச்சூழல் என்பது ஒரு கூட்டுப்பொறுப்பாகும். நமது சுற்றுச்சூழலை குப்பைகள் மற்றும் மாசுபாட்டிலிருந்து காக்க அரசாங்கம் குடிமக்களுடன் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.
- சுத்தமான சுற்றுச்சூழல் முதன்மை அளிக்கப்பட வேண்டிய கூறுகள் ஆகும்.
- அரசு, வணிகம் மற்றும் ஒவ்வொரு குடிமகனும் இணைந்து மாசற்ற சுற்றுச்சூழல் அமைந்திட வழிவகை செய்திடல் வேண்டும்.

**17) இந்தியாவில் சமசீரற்ற மக்கள் தொகைப் பரவலுக்கான காரணிகளை விளக்குக.**

- சீரற்ற மக்கள் தொகை என்பது மக்கள் தொகை அடர்த்தியில் வகைப்படுத்தப்படுகிறது.
- டெல்லி, மும்பையில் மக்கள் தொகை அடர்த்தி குறைவாக உள்ளது. அதேசமயம் அருணாச்சல பிரதேசத்தில் குறைவாக மக்கள் தொகை குறைவாக உள்ளது. 1

**மக்கள் தொகையின் சீரற்ற பரவலுக்கான காரணிகள்:**

**அ) இயற்கைக் காரணங்கள்:** 2

**1. நிவாரணம்:**

- மலையானது அடர்ந்த காடு மற்றும் கடுமையான காலநிலையும் கரடுமுரடான மேற்பரப்பைக் கொண்டுள்ளது.
- உதாரணம்: வடகிழக்கு மாநிலங்கள்

**2. காலநிலை:**

- தீவிர தட்பவெப்ப நிலை மக்கள் அடர்த்தியை பாதிக்கிறது.
- உதாரணம்: மக்கள் தொகை அடர்த்தி

**3. நதி அமைப்பு:**

- அவர்கள் விவசாயம், குடிநீர், நீர் மின்சாரம் போன்றவற்றை விரும்புகின்றனர்.
- உதாரணம்: கான்பூர், கொல்கத்தா, புதுடெல்லி மக்கள் தொகை அடர்த்தியானவை.

**4. கனிமங்கள்:**

- சோட்டாநாக்பூர் பீடபூமி
- கனிம வளங்களைக் கொண்ட கர்நாடக பீடபூமி அடர்த்தியான மக்கள் தொகை கொண்டுள்ளது.
- புவியியல் இடம்
- நன்கு இணைக்கப்பட்ட சாலைகள் மற்றும் ரயில்வே.
- உதாரணம்: புனே, நாசிக்

**ஆ) பொருளாதார காரணிகள்:** 3

**1. வேளாண்மை:**

- நிலத்தின் உற்பத்தித்திறனில் உள்ள வேறுபாடு மக்கள் தொகையின் சீரற்ற விநியோகத்திற்கு வழிவகுக்கிறது.

**2. தொழில்கள்:**

- பெரிய நகரங்கள் டெல்லி, கொல்கத்தா, சென்னையை எடுத்துக் கொண்டால் அதிக வேலைவாய்ப்பை வழங்குகின்றன.
- அவை வளர்ந்த தொழில்துறையில் நன்கு இணைக்கப்பட்டுள்ளன.

**இ) வரலாற்று காரணிகள்:**

- இந்தியப் பிரிவினைக்குப் பிறகு ஏராளமான மக்கள் மேற்கு வங்கத்தில் குடியேறினர்.

**ஈ) மத காரணிகள்:**

- வாரணாசி, மதுரா, பூரி போன்ற இடங்கள் மக்கள் தொகை அடர்த்தியாக உள்ளது.

**உ) அரசியல் காரணிகள்:**

- இந்தியாவின் தலைநகர் கொல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றப்பட்ட பிறகு, வெவ்வேறு மக்கள் இந்தியாவின் துறைமுகங்களுக்கு குடியேறின.

**18) வறுமை மற்றும் எழுத்தறிவின்மை ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையது – விளக்குக.**

**வறுமை மற்றும் கல்வியறிவின்மை ஆகியவை நெருங்கிய தொடர்புடையவை:** 6

1. படிப்பறிவின்மை என்பது படிக்கவோ எழுதவோ முடியாத நிலை என வரையறுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இது ஒரு சமூகத்தின் வறுமை நிலைக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.
2. உலகின் இரண்டாவது பெரிய மக்கள் தொகையுடன், உலக வறுமையில் மூன்றில் ஒரு பங்கை இந்தியா

கொண்டுள்ளது. 22% இந்தியர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர்.

3. அறிவு மற்றும் கல்வியின் பற்றாக்குறை உள்ளவர்களால் சிறந்த ஊதியம் பெறும் வேலைகளில் நிலைத்து இருப்பது இயலாததாகும். அவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத நிலையிலேயே இருப்பர். எனவே கல்வியறிவின்மை நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது.

4. கல்வியறிவின்மை நேரடியாகவும் மறைமுகமாகவும் பல வழிகளில் வறுமைக்கு பங்களிக்கிறது. ஒரு வறுமையுற்ற மனிதர் உயர் தரத்திலான கல்வியை பெற முடியாதபொழுது அவர் அதிக வருவாய் ஈட்டும் வேலை பெறும் வாய்ப்பை இழக்கிறார். இதுவே வறுமைக்கும் படிப்பறிவின்மைக்கும் இடையே ஆன தொடர்பு ஆகும்.

5. இது வறுமையின் மற்ற விளைவுகளுக்கும் வழிவகுக்கிறது. அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்ய முடியாத ஒரு மனிதர் தங்களுடைய குழந்தைகளையும் வேலைக்கு அனுப்புகிறார்.

**அலகு - 2**

1) **இந்தியாவில் அதிகரித்துவரும் வரதட்சனை மரணங்கள் ஒரு கவலைக்குரியதாகும் - இதன் அடிப்படையில் வரதட்சணை தடைச்சட்டம் - 1961 ஐ ஆராய்க.**

**வரதட்சணை** 1

- இது ஒரு பெண் தன் கணவன் (அ) அவனது குடும்பத்திற்கு தன் திருமணத்திற்காக கொண்டு வரும் பணம், பொருட்கள் அல்லது சொத்து ஆகியவற்றைக் குறிக்கும்.
- ஆணாதிக்கம் கொண்ட கலாச்சாரங்களில் வரதட்சணை மிகவும் பொதுவானது.

**வரதட்சணை மரணம்** 0.5

- வரதட்சணை மரணங்கள் என்பது வரதட்சணைக் கொடுமையால் கணவன் மற்றும் அவனது வீட்டைச் சார்ந்த உறவினர்களால் துன்புறுத்தலுக்கும் சித்தரவதைக்கும் ஆளாகி கொலை செய்யப்பட்ட (அ) தற்கொலைக்கு தூண்டப்பட்ட பெண்களின் மரணங்களை குறிக்கிறது.
- இது பொதுவாக கணவனின் குடும்பத்தாரின் முந்தைய குடும்ப முறைகேடுகளின் உச்சகட்டமாகும்.
- பெரும்பாலான வரதட்சணை மரணங்கள் இளம் பெண்களால் தாங்க முடியாமல் நிகழ்கின்றன.
- வரதட்சணை மரணங்களில் மணப்பெண்ணை எரிப்பதும் அடங்கும்.

**இந்தியாவில் வரதட்சணை மரணம்** 2

- NCRBஇன் 2017இல் ஒரு வருடத்தில் 7000 வரதட்சணைக் கொலைகள் 0.5




- 2019ஆம் ஆண்டில் மட்டும், 7115 வரதட்சணை தொடர்பான வழக்குகள் இந்திய தண்டனைச் சட்டம் 304பி பிரிவின்கீழ் பதிவு செய்யப்படுகிறது.
- பெண்கள் எதிர்கொள்ளும் எண்ணற்ற ஆபத்துகளில் ஒன்று அதிக வரதட்சணை கோரும் சட்டங்களில் இளம் மணப்பெண்களை தொடர்ந்து முறைகேடாக பயன்படுத்துவது.

**வரதட்சணை தடைச் சட்டம் 1961** 1

**நோக்கம்**

- வரதட்சணை முறையை ஒழிக்க இச்சட்டம் இயற்றப்பட்டது.
- இது வரதட்சணை கோருதல் மற்றும் விளம்பரப்படுத்துதல் ஆகியவற்றை தண்டிக்கிறது.

**தண்டனை** 5

**பிரிவு - 3**

- வரதட்சணைக் குற்றம் நிரூபிக்கப்பட்டால், 5 ஆண்டுகள் சிறை ரூ10000 குறைந்தபட்ச அபராதம் விதிக்கப்படும்.

**பிரிவு 4**

- வரதட்சணை கேட்டால் அபராதம்-குறைந்தது 6 மாத சிறை தண்டனை
- குறைந்தபட்சம் ரூ10000 அபராதம்

**சட்டத்திருத்தம்**

- 1984 மற்றும் 1986இல் திருத்தப்பட்டது மற்றும் வரதட்சணை தடை (மணமகள் மற்றும் மணமகன் அறைக்கான பரிசுப் பட்டியல்களை பராமரித்தல்) விதிகள், 1982 மூலம் கூடுதலாக வழங்கப்பட்டது.

**நடைமுறையில் வரதட்சணை தடைச் சட்டத்தின் பயனற்ற தன்மை** 2

1. **வரதட்சணை அச்சுறுத்தல் மீதான விளைவு**

- 1961ன் சட்டம் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை.
- வரதட்சணை இன்றும் நடைமுறையில் உள்ளது.
- சட்டத்தை திருத்தியபோதும், அதைக் கட்டுப்படுத்துவதிலும், ஒழிப்பதிலும் வெற்றி பெறவில்லை.

2. **சமூகத்தில் இருந்து வரதட்சணை நடைமுறையை அகற்றுவதில் சட்டத்தின் தோல்வி**

- வரதட்சணை சட்டத்திற்கு குறைவான சமூக அங்கீகாரம், ஆதரவு
- வரதட்சணையின் சமூக ஏற்பு
- 1984 மற்றும் 1986ஆம் ஆண்டுகளில் கடுமையான தண்டனைகளை சட்ட திருத்தங்கள் வழங்கிய போதிலும் நாள்தோறும் தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

3. **அறியக்கூடிய குற்றமல்ல**

- அறியப்படாத குற்றமானது சட்டத்தின் நோக்கத்தை ரத்து செய்கிறது.
- உதாரணம் : வரதட்சணை கொடுத்த ஒரு தந்தை தன் மகளுக்கு மகளின் குடும்பத்திற்கு எதிராக புகாரளிக்க விரும்ப மாட்டார்.

4. **பரிசுகளுக்கு உச்சவரம்பு இல்லை**

- தற்போதுள்ள சட்டத்தில் உள்ள முக்கிய ஓட்டை என்னவென்றால், பரிசுப் பொருட்கள் எதையும் அனுமதிக்கலாம் என்பதாகும்.

5. **வரதட்சணை எதிர்ப்பு சட்டத்தை தவறாக பயன்படுத்துதல்**

- பெண்களின் தனிப்பட்ட நலனுக்காக கணவர்கள் மீது சுமத்தப்படும் பொய்யான குற்றச்சாட்டுகள்.

**முடிவுரை**

- முழுமையான நீதி மற்றும் பாதுகாப்பிற்காக சட்டங்கள் காலப்போக்கில் கடுமையாகிவிட்டன.
- பெண்கள், மக்களிடையே விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. ஆனால் அது மக்களிடையே எந்த தடைகளையும் உருவாக்கவில்லை.
- வரதட்சணைத் தடைச்சட்டம் ஒரு சமூகச் சட்டமாகும். இது வரதட்சணையில் பயனளிக்கவில்லை.
- தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் / சிவில் சமூகங்களின் உதவியோடு அரசாங்கத்தின் தலையீடும் தேவை
- கல்வி பெண்ணின் சுயசார்பு ஊக்கியாக மாறி, பாலின ஏற்றத்தாழ்வு மற்றும் பெண்களின் சுயமரியாதை இழப்பை மாற்றியமைக்கலாம்.

**2) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு வரைக.**

1. **DRDA**
2. **PURA**
3. **சர்வதேச வெளிப்படைத்தன்மை**
4. **இந்தியாவில் CrPC - 144 ன் சமீபத்திய பயன்பாடு**

**1. DRDA: மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை:**

**தோற்றம்:** 3

- இந்திய அரசின் சங்கங்கள் பதிவுச் சட்டம், 1860 ன் படி பதிவு செய்யப்பட்டு, 1 ஏப்ரல் 1999 முதல் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் இயங்குகிறது.

**நோக்கம்:**

- கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன் செயல்படுகிறது.

**நிறுவன அமைப்பு**

- ஜில்லா பரிஷத்தின் தலைவர் / மாவட்ட நிர்வாக அலுவலர்
- அனைத்து சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள்
- எழுத்து வரிசைப்படி மூன்றில் ஒரு பங்கு பஞ்சாயத்து சமிதி தலைவர்கள் ஒரு வருடத்திற்கு நியமிக்கப்படுகிறார்கள்.
- இதில் ஒருவர் பட்டியல் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சார்ந்தவர்களாகவும், மற்றொருவர் பெண்ணாகவும் இருக்க வேண்டும்.
- தலைமை நிர்வாக அதிகாரி / நிர்வாக இயக்குநர் – ஜில்லா பரிஷத்தின் தலைவர் / மாவட்ட ஆட்சியர்
- ரிசர்வ் வங்கி மற்றும் தேசிய வங்கியின் தலைமை அதிகாரிகள்

**செயல்பாடுகள்:**

- நிதிப்பங்கீடு 90% மத்திய அரசு 10% மாநில அரசு
- கிராம ஊராட்சிகளின் உள்கட்டமைப்பு, கிராமப்புற வேலைவாய்ப்பு சுகாதாரம், அடிப்படைக் கல்வி, மருத்துவம், சமூகப் பாதுகாப்பு மகளிர் மேம்பாடு, கைவினைத்தொழில் மேம்பாடு போன்ற சமூக பொருளாதார வளர்ச்சிப்பணிகளை மேற்கொள்கிறது.

**2. PURA** 3

- **PURA:** கிராமப்புறங்களில் நகர்ப்புற வசதிகளை வழங்குதல்

**தோற்றம்:**

- 2003ல் முன்னால் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்களால் முன்மொழியப்பட்டது.

**அமைச்சகம்:**

- ஊரக வளர்ச்சி துறை அமைச்சகம்.

<u>பைலட் திட்டம்:</u>

- 3 வருட காலத்திற்கு (2004 & 2007) ஏழு தொகுப்புகளாக தொடங்கப்பட்டது.

**PURA 2.0**

- மத்தியத் துறை திட்டம் 2012ல் தொடங்கப்பட்டது.
- மக்கள்தொகை கணக்கெடுப்பு நகரங்கள் போன்ற சாத்தியமான வளர்ச்சி மையங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது.

<u>நடைமுறைப்படுத்துதல்:</u>

- கிராமப்புறங்களில் வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் நகர்ப்புற வசதிகளை வழங்குதல்.
- கிராமப்புற-நகர்ப்புற பிளவைக் குறைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

<u>நகர்ப்புற பணி:</u>

- 2014-15 ல் தொடங்கப்பட்டது.
- 300 கிராமப்புற வளர்ச்சிக் குழுக்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டது.

**3. சர்வதேச வெளிப்படைத் தன்மை: 3**

- இது உலக வங்கியின் முன்னாள் ஊழியர்களால் 1993ல் நிறுவப்பட்ட ஒரு சங்கமாகும்.

<u>குறிக்கோள்:</u>

- ஊழலை எதிர்த்து குற்றங்களைத் தடுத்தல்

<u>செயல்பாடு:</u>

- இது ஒரு சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனம்
- இது இரண்டு அறிக்கைகளை வெளியிட்டது.
- உலகளாவிய ஊழல் அறிக்கை
- ஊழல் புலனாய்வு குறியீடு (CPI)

<u>இந்தியாவின் தரவரிசை:</u>

- சர்வதேச வெளிப்படைத்தன்மையின் படி, 2021 ம் ஆண்டில் ஊழல் புலனாய்வு குறியீட்டில் 180 நாடுகளில் இந்தியா 85 வது இடத்தில் உள்ளது.

**4. இந்தியாவில் CrPC -144 ன் சமீபத்திய பயன்பாடு:CrPC - பிரிவு 144: 3**

- ஒரு குறிப்பிட்ட பகுதியில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் கூடுவதைத் தடைசெய்யும் உத்தரவைப் பிறப்பிக்க இந்தியாவில் உள்ள எந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தின் நீதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது.

<u>பிரிவு 144 ன் அம்சங்கள்:</u>

- எந்த வகையான ஆயுதத்தையும் கையாள்வதில் கட்டுப்பாடுகளை விதிக்கிறது.
- அதிகபட்ச தண்டனை 3 ஆண்டுகள்.
- பொதுமக்கள் நடமாட தடை விதிப்பது.
- சட்ட அமலாக்க முகமைகளைத் தடுப்பது தண்டனைக்குரிய குற்றம்.
- வட்டி அணுலைத் தடுக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- அமைதி மற்றும் ஒழுங்கைப் பேணுதல்.
- அதிகபட்ச காலம் 6 மாதங்கள்.

<u>CrPC -144ன் சமீபத்திய பயன்பாடு:</u>

- கோவிட் - 19 தொற்று காலத்தில் பொது முடக்கத்தை செயல்படுத்துதல்
- 4 ஆண்டுகளுக்கான ராணுவ ஆட்சேர்ப்பு செய்வதற்கான மத்திய அரசின் அக்னிபாத் திட்டத்திற்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து ஜெய்ப்பூரில் அமல்படுத்தப்பட்டது.
- அக்னிபாத் திட்டத்தின்கீழ் இளைஞர்களை நான்கு வருடம் பணியமர்த்துவதற்கு எதிரான போராட்டத்திற்காக ஜெய்ப்பூரில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**3) தமிழகத்தில் நிலவும் பல்வேறு குழந்தை தொழிலாளர் முறைகளை சுட்டி காட்டுக. மேலும் அது தொடர்பாக தமிழக அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளை விளக்குக.**

<u>குழந்தைத் தொழிலாளர்</u> **8**

- இது குழந்தைகளின் குழந்தைப் பருவம், திறன் மற்றும் கண்ணியம் மற்றும் உடல், மன வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்கும் வேலை.

<u>தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர்</u>

- CRY, NGO – 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 40.3 மில்லியன் குழந்தைகள் வேலை செய்கிறார்கள்.
- அவர்களில் 25 - 23 மில்லியன் போர் விவசாயத் துறையில் வேலை செய்கிறார்கள்.

<u>தமிழகத்தில் குழந்தை தொழிலாளர் பிரச்சினை</u>

<u>1. முதன்மைத் துறையில் குழந்தைத் தொழிலாளர்</u>

- விவசாய நடவடிக்கைகள், மணல் குவாரிகள், மண்பானை மற்றும் செங்கற்கள் உற்பத்தி ஆகிய துறைகளில் குழந்தைகள் வேலை செய்கிறார்கள்.
- எ.கா : தென்காசி, திருநெல்வேலி பகுதி

<u>2. உற்பத்தித் துறையில் குழந்தைத் தொழிலாளர்</u>

- கிட்டத்தட்ட 30.8% குழந்தைகள் உற்பத்தித் துறையில் வேலை செய்கிறார்கள்.
- எ.கா : சிவகாசி பட்டாசு ஆலைகள், திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

**3. சேவைத் துறையில் குழந்தைத் தொழிலாளர்கள்**

- சுமார் 26.4% குழந்தைகள் சேவைத் துறையில் பணிபுரிகின்றனர்.

**4. அமைப்புசாரா துறையில் குழந்தைத் தொழிலாளர்கள்**

- ஒழுங்கமைக்கப்படாத துறை குழந்தைகளுக்கான மிக முக்கியமான வேலைவாய்ப்புத் துறையாகும்.
- எ.கா : விவசாய தொழிலாளர்கள், சந்தைகள், சாலையோரக் கடைகள் முதலியன.

**5. கொத்தடிமை குழந்தை தொழிலாளர்கள்**

- ராம்நாடு அருகே கால்நடை வளர்ப்பு பண்ணைகள், கரி அலகுகள், விளிம்பு அலகுகள் போன்றவற்றில் கொத்தடிமைகளாக இருந்து சுமார் 40 குழந்தைகளை ஷெட் இந்தியா என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் மீட்டுள்ளது.

**6. குழந்தை கடத்தல்**

- வேலைக்காகவோ (அ) பாலியல் சுரண்டலுக்காகவோ குழந்தைகளை வாங்குவதும் விற்பதும் தமிழகத்தின் நகர்ப்புறங்களில் அதிகம் காணப்படுகிறது.

**7. அபாயகரமான தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர்கள்**

- சிவகாசியில் தீப்பெட்டி தொழிற்சாலைகள் போன்ற அபாயகரமான இடங்களில் இருந்து குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு அவர்களுக்கு கல்வி உறுதி செய்யப்பட்டது.

**8. குழந்தைத் தொழிலாள் பிரச்சினையால் கோவிட் - 19 தொற்றுக்கு பிந்தைய விளைவு**

- கோவிட் - 19 தொற்றுநோய்க்கு பிறகு தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை 28% அதிகரித்துள்ளது.

**குழந்தை தொழிலாளர்களுக்கு தீர்வு காண தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகள்** 4

**1. தமிழ்நாட்டில் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்**

- மாநிலத்தில் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.
- 315 சிறப்பு பயிற்சி மையங்களின் செயல்படுகின்றன மற்றும் 7247 குழந்தைகளுக்கு கல்வி ஆதரவை வழங்குகின்றன.
- NCLP ஆல் குழந்தைகளுக்கு மாதம் ரூ150 ரூபாய் வழங்கப்படும்.

**2. இந்திய அமெரிக்க குழந்தை தொழிலாளர் திட்டம்**

- 21 மாவட்டங்களில் 10 அபாயகரமான துறைகளில் செயல்படுத்தப்பட்டது.
- டெல்லி
- மகாராஷ்ட்ரா
- மத்தியப் பிரதேசம்
- தமிழ்நாடு
- உத்திரப்பிரதேசம்
- தமிழ்நாடு
- உத்திரப்பிரதேசம்
- அதன் முடிவில் கணக்கிடப்பட்ட ஒரே தென்னிந்திய மாநிலம் தமிழ்நாடு.

**3. முதல்வரின் 15 அம்சதிட்டம்**

- 2005ஆம் ஆண்டளவில் அனைத்து அபாயகரமான தொழில்களிலும் மற்றும் 2007ஆம் ஆண்டளவில் அபாயமற்ற தொழிலிலும் குழந்தைத் தொழிலாளர்களை ஒழிப்பதற்கான செயல்திட்டம்

**4. முதலமைச்சரின் இலக்கு**

- அரசு முயற்சிகள் மூலம் மாநிலத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க தமிழக முதல்வர் உறுதியளித்துள்ளார்.
- இலவச சீருடை, புத்தகங்கள், மதிய உணவுத் திட்டம், இலவச பேருந்துப் பயணம் போன்ற திட்டங்கள் மூலம் 2025ஆம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர்களை ஒழிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

---

**4) ஊழலை கட்டுப்படுத்திட அரசின் பல்வேறு சட்ட நடவடிக்கைகளை விளக்குக.**

- 2021ஆம் ஆண்டின் ஊழல் புலனுணர்வு குறியீட்டின்படி 180 நாடுகளில் இந்தியா 25ஆவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் 51% ஊழல் நடைமுறையை தொடர்கிறார்கள்.
- இந்தியா பல்வேறு ஊழல் தடுப்புச் சட்டங்களை இயற்றியுள்ளது. அவை

**சட்ட கட்டமைப்பு** 6

**1. ஊழல் தடுப்புச் சட்டம் 1988**

- அரசு ஊழியர்கள் மற்றும் ஊழலுக்கு உடந்தையாக இருப்பவர்கள் தொடர்பான அபராதங்களை வழங்குகிறது.
- 2018இல் திருத்தப்பட்டது.
- அரசு ஊழியர்கள் லஞ்சம் வாங்குவது
- யாரேனும் ஒருவர் லஞ்சம் கொடுப்பது

**2. பணமோசடி தடுப்புச் சட்டம் 2002**

- 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை உட்பட கடுமையான தண்டனை

SURESH'

- குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்தல்

**3. வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டம் 2010**

- வெளிநாட்டு பங்களிப்புகளை ஒழுங்குபடுத்துகிறது
- வெளிநாட்டு பங்களிப்புகளுக்கு MHAன் முன் பதிவு அல்லது முன் அனுமதி தேவை இல்லையெனில் அது சட்டவிரோதமானது.

**ஒழுங்குமுறை கட்டமைப்பு** 6

**1. லோக்பால் & லோக்ஆயுக்தா சட்டம், 2013**

- மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு ஒம்புட்ஸ்மேன் நிறுவுதல்
- பிரதமர் மற்றும் பிற அமைச்சர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரித்தல்

**2. மத்திய புலனாய்வுத் துறை - 1964**

- 2003இல் சட்டப்பூர்வ அமைப்பு உள்ளது.
- பல உறுப்பினர் குழு (ஆணையர் மற்றும் 2இக்கு மிகாத உறுப்பினர்கள்)

**3. சட்டம் 2005**

- அரசாங்கத்திடம் வெளிப்படை தன்மையை கொண்டுவர
- தகவலை வழங்க தவறினால் ரூ25000 வரை அபராதம்

**4. இடித்துரைப்பாளர்கள் பாதுகாப்பு சட்டம் 2014**

- எந்தவொரு நபரும் ஒரு தகுதி வாய்ந்த அதிகாரியிடம் தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் இயற்றப்பட்டது.
- ஊழல் அல்லது அதிகாரத்தை வேண்டுமென்றே தவறாகப் பயன்படுத்துதல் குற்றமாகும்.

**5) "வெறுப்பு பேச்சு" எவ்வாறு நாட்டின் சமூக நல்லிணத்திற்கு எதிராக அமைந்துள்ளது? அதனை கட்டுப்படுத்த உனது ஆலோசனைகள் என்ன?**

**வெறுப்புப் பேச்சு** 1

- வெறுக்கத்தக்க பேச்சு என்பது ஒரு குறிப்பிட்ட குழுவின் மீது வெறுப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட வார்த்தைகளை குறிக்கிறது.
- அந்த குழு ஒரு சமூகம் மதம் அல்லது இனமாக இருக்கலாம் 0.5

வெறுப்பு பேச்சு

↓

குற்றம்

↓

இனப்படுகொலை

↓

மத நல்லிணக்கத்தின் இறுதி அழிவு

**1. வெறுப்புக் குற்றத்திற்கு வெறுப்பூட்டும் பேச்சு** 4.5

- ஒரு கணக்கெடுப்பின்படி / 2014 முதல் 2022 வரை சுமார் 878 வெறுப்பு பேச்சு வழக்குகள் (54%) மற்றும் வெறுப்புக் குற்றங்கள் (46%) நிகழ்ந்துள்ளன.
- வெறுப்புக் குற்றங்களின் முக்கிய நோக்கங்கள்
  - முஸ்லீம் (73.3%)
  - இந்தியாவில் கிறிஸ்தவர்கள் (26.7%)

**2. இனப்படுகொலைக்கு வெறுப்பூட்டும் பேச்சு**

- 2022இல் இனப்படுகொலை கண்காணிப்பின் தலைவர் கிரிகோரி ஸ்டாண்ட்ன் இந்தியாவில் முஸ்லீம்கள் இனப்படுகொலைக்கான குறிப்பிடத்தக்க அறிகுறிகள் இருப்பதாக கூறினார்.
- இது கும்பல் வன்முறை வழியில் இருந்து வருகிறது.

**3. வகுப்புவாத நல்லிணக்கத்தை சீர்குலைததல்**

- 2013 ஆம் ஆண்டு முசாபர் நகர் கலவரம் வகுப்புவாத உணர்வுகளைத் தூண்டும் ஒரு போலி வீடியோவில் தூண்டப்பட்டது.
- இது பாகுபாட்டையும் சமூகங்களுக்கு இடையே பகைமையையும் ஊக்குவிக்கிறது.
- வகுப்புவாதம் சமூக நல்லிணக்கத்தின் அழிவிற்கு வழிவகுக்கிறது.

**வெறுப்பூடடும் பேச்சைக் கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகள்** 6

**1. கல்வி**

- வெறுக்கத்தக்க பேச்சை நீர்த்துப்போகச் செய்வதற்கான மிகச்சிறந்த வழியாகும்.
- மற்றவர்களுடன் இரக்கத்தை ஊக்குவிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது.

**2. மாற்று தகராறு தீர்வு**

- வெறுக்கத்தக்க பேச்சு வழக்குகளை மூலம் தீர்க்க முடியும்.
- இது நீதிமன்றத்தின் நீண்ட நடைமுறையிலிருந்து பேச்சுவார்த்தை மூலம் தகராறைத் தீர்ப்பதற்கு மாற்றத்தைமுன்மொழிந்தது.

**3. சட்டங்களை கடுமையாக செயல்படுத்துதல்**

- விஸ்வநாதன் கமிட்டி 2019 மற்றும் பெஜாரியஸ் கமிட்டி 2014.
- வெறுப்புப் பேச்சு மற்றும் அதைத் தடுக்கும் வகையால் சட்டங்களை செயல்படுத்த வேண்டும்.
- சில பரிந்துரைகள் மூலம் வெறுப்புப் பேச்சுக்களை கட்டுப்படுத்தி மத நல்லிணக்கத்தைப் பேண முடியும்.

6) **கல்வியறிவின்மைக்கான காரணங்களை விளக்குக, மற்றும் அதனை கட்டுப்படுத்த தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை பட்டியலிடுக.**

**கல்வியறிவின்மை** 0.5

- யுனெஸ்கோவின் கூற்றுப்படி, படிப்பறிவின்மை என்பது எழுதப் படிக்கத் தெரியாமை.
- எழுத்தறிவின்மை பொதுவாக அன்றாட வாழ்க்கையில் ஒரு சிறிய எளிய அறிக்கையை புரிந்து கொள்ள இயலாமைக்கு ஏற்ப அளவிடப்படுகிறது.

**இந்தியாவில் எழுத்தறிவின்மை** 0.5

- 287 மில்லியன் மக்கள்இந்தியாவில் எழுதப் படிக்க தெரியாத நிலையில் உள்ளனர்.




**எழுத்தறிவின்மையின் காரணங்கள்** 6

**1. அதீத மக்கள் தொகை**

- மக்கள்தொகையில் விரைவான அதிகரிப்பு காரணமாக வளங்களுக்கான தேவை அதிகமாக உள்ளது.
- அதிக குழந்தைகளைப் பெற்ற ஏழை மக்கள் அவர்களை வேலைக்கு அனுப்புகின்றனர்.

**2. வறுமையின் பரவல்**

- இந்திய மக்கள் தொகையில் 2/3 பேர் வறுமையில் வாழ்கின்றனர்.
- எழுத்தறிவின்மைக்கான விளைவுகளுக்கும் காரணத்திற்கும் ஏழ்மையே காரணம்
- கல்வி பெறுவதற்கான அடிப்படை வசதிகள் இல்லாமை
- தொலை தூரப் பகுதிகளில் வசிப்பவர்கள் பள்ளி வசதி குறைவாக கொண்டவர்களாகவோ (அ) கல்வி வசதி இல்லாதவர்களாகவோ உள்ளனர்.

**3. பெற்றோரிடையே விழிப்புணர்வு இல்லாமை**

- வாழ்க்கையில் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய அறிவு இல்லாமை
- இதனால் அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கும் முறையான கல்வியை கொடுக்க முடிவதில்லை.

**4. கிராமப்புறங்களுக்கு போதிய கல்வி வசதிகள் இல்லாமை**

- இந்தியாவில் கிராமப்புறங்கள் கல்வியின் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர்.

**5. சமூக தடைகள்**

- பெண் கல்வியை அனுமதிக்காத குடும்பங்கள் மற்றும் சமூக நெறிமுறைகள் இந்தியாவில் இன்றும் நடைமுறையில் உள்ளன.

**6. படித்தவர்களின் வேலையின்மை**

- வயது வந்த இளைஞர்களில் 33% பேர் தளவாடங்கள் இல்லாததால் வேலையில்லாமல் இருப்பதாக கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன.

**எழுத்தறிவின்மையை கட்டுப்படுத்த தமிழக அரசின் திட்டங்கள்** 5

**1. தமிழகத்தின் புதிய கல்விக் கொள்கை 2022**

- மாநிலத்தில் 100% எழுத்தறிவை எட்டுவது
- 15 வயதுக்கு மேற்பட்ட 4.80 லட்சம் மக்கள் எழுதப் படிக்கத் தெரியாத நிலையில் உள்ளனர்.

**செயல்படுத்துதல்**

- 2000ஆம் வயது வந்தோர் கல்வி மையங்கள்
- மார்ச் 2023க்குள் இலக்கை எட்டுவது
- 10 கோடி நிதி ஒதுக்கீடு

**2. எண்ணும் எழுத்தும் திட்டம் (2022 - 2023)**

- கோவிட் - 19 தொற்றுநோயால் உண்டான கற்றல் இடைவெளியை குறைப்பது
- 2025ஆம் ஆண்டிற்குள் 8 வயது வரை உள்ள அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படை எண்கணிதத் திறன்களை கொண்டு செல்ல உறுதிப்படுத்துதல்

**3. கற்போம் எழுதுவோம் திட்டம்**

- 15 முதல் 55 வயதுவரை உள்ளவர்களுக்கு அடிப்படை கல்வியறிவை கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வயது வந்தோர் கல்வி இயக்கத்தால் செயல்படுத்தப்படுகிறது.

**4. கற்கும் பாரதம்**

- பெண்களின் கல்வியறிவு 50%க்கும் குறைவாக உள்ள மாவட்டங்களில் சிறப்பாக செயல்படும் வயதுவந்தோர் கல்வித்திட்டமாகும்.
- அடிப்படை கல்வியறிவைத் தொடர முடியாத பெரியவர்களுக்கு தேவையான வசதிகளை செய்வதில் கவனம் செய்வதில் கவனம் செலுத்துகிறது.
- பெண்கள்SC / ST , சிறுபான்மையினர் பின்தங்கிய வகுப்பினருக்கு சிறப்பு கவனம்.
- நிதி பங்கீடு 60 : 40

**7) பெண்களின் மீதான பாலியல் வன்கொடுமை தாக்குதலுக்கு காரணமான தனிநபர் மற்றும் சமூக காரணிகள் யாவை? மேலும் நவீன தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் பெண்களின் பாதுகாப்பை நாம் எவ்வாறு உறுதிப்படுத்த இயலும்?**

**பாலியல் வன்முறை** **0.5**

- பெண்கள் பாலியல் வன்முறை மற்றும் தொடர்புடைய குற்றங்களுக்கு ஆளாகும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று.
- NCRB இன்படி 2019ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 4,05,861 வழக்குகள்பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இது 2018.ல் 7.3% அதிகரித்துள்ளது.

**பாலியல் வன்முறை பற்றிய புள்ளிவிவரங்கள்** **0.5**

- ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும், இந்தியாவில் எங்காவது ஒரு பெண் கற்பழிக்கப்படுகின்றன.
- 2019ஆம் ஆண்டில், நாட்டில் ஒவ்வொரு நாளும் 88 கற்பழிப்பு வழக்குகள் பதிவாகியுள்ளன.
- அவர்களில் 11% தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்
- பாலின அடிப்படையிலான சமூகத்தின் அறிக்கையின் கீழ் தாமதமான நீதிக்கான தற்போதைய சட்ட விதிகளில் உள்ள சிக்கல்கள், அதிகரித்து வரும் பாலியல் வன்முறைகளுக்கு வழிவகுக்கிறது.

**பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைக்கான தனிப்பட்ட காரணங்கள்** **3**

**1. தெரிந்தவர்களால் ஏற்படும் பாதிப்பு**

- பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளில் 93% குடும்பத்தைச் சேர்ந்தே தெரிந்தே நபர்களால் ஏற்படுகிறது.

**2. போதைப் பொருட்களால் எளிதாக்கப்பட்ட பாலியல் தாக்குதல்**

- போதைப் பொருட்களால் பாலியல் வன்கொடுமைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு தெரியாமல் நிகழ்கிறது.

**3. ஆண்களின் ஆக்கிரமிப்பு**

- பாதிக்கப்பட்ட பெண்களின் மீது ஆதிக்கம் மற்றும் கட்டுப்பாடு
- பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளின் தாக்கம் குறைவாகவே உள்ளது.

**பாலியல் வன்முறைக்கான சமூக காரணங்கள்**

**1. ஆணாதிக்க சமூகம்** **3**

- ஒட்டுமொத்த சமூகமும் பாதிக்கப்பட்டவரை குற்றம் சாட்டி அவர்களின் குடும்பத்தை தவறான முடிவெடுக்க தள்ளுகிறது.
- ஆண்களின் மேலாதிக்கம் திருமண கற்பழிப்பிற்கு வழிவகுக்கிறது.

**2. சமூக விதிமுறைகள்**

- பெரும்பாலும் பெண்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே கருதப்படுகிறார்கள்.
- ஆணவக் கருத்தியலைக் கொண்ட சமூகங்களில் ஆதிக்கத்தை வலியுறுத்தி கௌரவப் பலாத்காரம் செய்வது மிகவும் பொதுவானதாகிறது.

**3. குடும்ப வன்முறையை ஏற்றுக்கொள்வது**

- சமூக நெறிகள் குடும்ப வன்முறையின் சகிப்புத்தன்மையை இயல்பாகியுள்ளன.
- இது பாலியல் வன்முறைக்கு வழிவகுக்கிறது.

**தகவல் தொழில்நுட்பங்களின் மூலம் பெண்களின் பாதுகாப்பு** **5**

**1. வலுவான கண்காணிப்பு அமைப்பு**

- ஆட்கள் நடமாட்டம் குறைவாக உள்ள பகுதிகளில் CCTV போன்ற மின்னணு கண்காணிப்பு அமைப்பை இயக்குதல் பணிபுரியும் பெண்களுக்கு சமுதாய பாதுகாப்பை உறுதி செய்யும்.
- LED விளக்குகளுடன் CCTVஐ இணைத்தல்

**2. GPS கண்காணிப்பு**

- இது தொடர்புடைய கண்காணிப்பு, மண்டல எச்சரிக்கைகள் SOS அலாரத்தை பயன்படுத்த உதவுகிறது.
- எ.கா : காவலன் செயலி

**3. சமூக பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்குதல்**

- இது அவசர அல்லது பாதுகாப்பற்ற நிலையில் அறிவிப்புகளைப் பெறும் தனிநபர்களின் சமூக பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்க உதவுகிறது.
- எ.கா : BSAFE செயலி

**4. பாதுகாப்பான பாதையை அடையாளம் காணுதல்**

- பணிபுரியும் பெண்கள் தடுமாற்றமான வழிகளில் வீடு திரும்புவது கடினம்
- பாதுகாப்பான இடத்தை அடைய ஒரு நபரை எச்சரிக்க உதவுகிறது.
- எ.கா My Safety Pin செயலி

**5. மின்னணுக் கருவிகளின் பயன்பாடு**

- ஆபத்தான சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட நபர், விழிப்பூட்டுதலை பெற்று அவசர நிலைக்கு உடனடியாக தொடர்பு கொள்ள உதவுகிறது.
- எ.கா : ஸ்மார்ட் வாட்ச் போன்றவை.

**8) இந்திய தலைமை கணக்கு தணிக்கையாளர் இந்திய பொதுமக்கள் பணத்தின் பாதுகாவலன் மற்றும் இந்திய பொது நிதியின் கண்காணிப்பாளர் என அழைக்கப்படுவதின் காரணம் என்ன? முழுமையாக விளக்குக.**

**தலைமை கணக்குத் தணிக்கையாளர்**

- அவர் இந்திய அரசியலமைப்பின் கீழ் ஒரு சுதந்திரமான அதிகாரி.
- அவர் இந்திய தணிக்கை & கணக்குத்துறை மற்றும் பொதுப் பணத்தின் தலைமைப் பாதுகாவலர்.
- தலைமை கணக்கு தணிக்கையாளர், இந்திய அரசியலமைப்பின்படி முக்கிய அதிகாரியாக இருக்க வேண்டும்.
- டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார்

**பொதுப்பணத்தின் பாதுகாவலர் என்று அழைக்கப்படுவதற்கான காரணங்கள் 6**

**1. தணிக்கை மற்றும் கணக்குகளுக்கான உச்ச அமைப்பு**

- மத்திய மற்றும் மாநில அரசு அனைத்து செலவினங்களுக்கான தணிக்கை மற்றும் கணக்குகளுக்கு உச்ச அமைப்பாகும்.

**2. நிர்வாகிகளின் பொறுப்புணர்வை அவர் சரிபார்க்கிறார்**

- நிதி நிர்வாகத்தின் அடிப்படையில் பாராளுமன்றத்தின் பொறுப்புக் கூறுகள் தலைமை கணக்கு தணிக்கையாளரின் தணிக்கை அறிக்கைகள் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

**3. கணக்கை அகற்றுவதற்கான சட்டப்பூர்வமான தன்மையை அவர் சரிபார்க்கிறார்.**

- காட்டப்படும் கணக்குகள் / பணம் சட்டப்பூர்வமாக வழங்கப்பட்டதா என்பதை அவர் சரிபார்க்கிறார்.
- செலவினம் அதை நிர்வகிக்கும் அதிகாரத்திற்கு உறுதிப்படுத்தப்படுகிறதா என்பதை சரிபார்க்கப்படுகிறது.

**4. அவர் தனியுரிமை தணிக்கை நடத்துகிறார்.**

- அவர் தனியுரிமை தணிக்கையை நடத்தலாம் மற்றும் அரசாங்க செலவினங்கள் & பொருளாதாரம் ஆகியவற்றைக் கவனிக்க முடியும்.
- அத்தகைய செலவினங்களின் தன்மையை பற்றி அவர் கருத்து தெரிவிக்கலாம்.

**பொது நிதியின் கண்காணிப்பாளர் என்று அழைக்கப்படுவதற்கான காரணங்கள் 6**

**1. அவர் தனது தணிக்கைக்கு உட்பட்ட எந்த அலுவலகத்தையும் ஆய்வு செய்கிறார்.**

- பரிவர்த்தனை தொடர்பான நிர்வாகிகளிடம் கேள்வி எழுப்பி அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறார்.

**2. அவர் மத்திய மற்றும் மாநிலத்தின் வரவு, செலவுகளை தணிக்கை செய்கிறார்.**

- கணக்குகள் தொடர்புடைய தணிக்கை
- இந்தியாவின் ஒருங்கிணைந்த கண்டுபிடிப்பு
